# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : இந்திய அரசியலமைப்பு

பகுதி : **மத்திய அரசு**


**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# மத்திய அரசு

## மத்திய அரசு (சரத்து 52-151)

**பகுதி V - மத்திய அரசு: (சரத்து 52 முதல் 151 வரை) குடியரசுத்தலைவர்**

**சரத்து (52):** இந்திய குடியரசுத் தலைவராக ஒருவர் இருப்பார் என கூறுகிறது. இவரே நாட்டின் தலைவர் ஆவார். குடியரசுத் தலைவர் நாட்டின் பெயரளவில் தலைவராக கருதப்படுவார். இவரே இந்தியாவின் முதல் குடிமகன் ஆவார். 53வது அரசியலமைப்புச் சட்டத்தின் படி மத்திய அரசங்கத்தின் அதிகாரங்கள் அனைத்தும் குடியரசுத் தலைவரிடமே உள்ளது.

**குடியரசுத் தலைவருக்கான தகுதிகள் (சரத்து 58):**

- ❖ இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும்.
- ❖ 35 வயது நிறைவு பெற்றவராக இருக்க வேண்டும்
- ❖ மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்படும் தகுதி உடைய -வராக இருக்கவேண்டும். ஆதாயம் தரும் அரசு பதவி வகிக்கக் கூடாது
- ❖ மனநிலை பாதிக்கப்பட்டவராகவோ, திவாலானவராகவோ இருக்கக் கூடாது.
- ❖ குறைந்தபட்சம் 50 வாக்காளர்களால் முன்மொழியவும், 50 வாக்காளர்கள் வழிமொழியவும் வேண்டும்.பாதுகாப்பு வைப்பு நிதியாக ரூபாய். 25,000 கட்ட வேண்டும்.

**குடியரசுத் தலைவர் தேர்தல்: சரத்து (54)**

- ❖ சரத்து 52 இந்தியாவிற்கு ஒரு குடியரசுத் தலைவர் இருக்க வேண்டும் என உரைக்கிறது.
- ❖ குடியரசுத் தலைவர் தேர்தலை இந்திய தேர்தல் ஆணையம் நடத்துகிறது.
- ❖ குடியரசுத் தலைவர் தேர்தலில் மாநிலங்களவை, மக்களவை உறுப்பினர்கள் மற்றும் மாநில சட்டப் பேரவைகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து உறுப்பினர்களும் வாக்களிப்பார்கள்.
- ❖ குடியரசுத் தலைவர் தேர்தல் விகிதாச்சார முறையில் ஒற்றை மாற்று வாக்கு, இரகசிய சீட்டு மூலமாக நடைபெறும். குடியரசுத் தலைவர் தேர்தல் தகராறுகளை உச்சநீதிமன்றம் தலையிட்டு தீர்த்து வைக்கும்
- ❖ ஒருவர் எத்தனை முறை வேண்டுமானாலும் குடியரசுத் தலைவராக தேர்ந்தெடுக்கப்படலாம்.

**கொத்தடிமை முறையை ஒழித்தவர் - இந்திராகாந்தி**

- குடியரசுத் தலைவர் வருமானம் ரூ. 1,50,000
- 2008ஆம் ஆண்டு நாடாளுமன்றம் குடியரசுத்தலைவரின் சம்பளத்தை 50% உயர்த்தியது

**பதவி விலகல்: சரத்து (61)**

- பதவிக்காலம் முடியும் முன்னரே குற்ற விசாரணை மூலமாக இவரை பதவி நீக்கம் செய்ய நாடாளுமன்றத்தினால் முடியும் **(சரத்து 61)**
- குடியரசுத் தலைவர் தனது ராஜினாமா கடிதத்தை துணை குடியரசுத் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும்.
- துணை குடியரசுத்தலைவர் மக்களவைத் தலைவருக்கு உடனடியாக குடியரசுத் தலைவர் ராஜினமாவை பற்றி அறிவிப்பர்.

**குடியரசுத் தலைவரின் பதவிபிரமாணம்**

**பதவிக்காலம்:**

- **குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள்.**

**பதவிப்பிரமாணம்:**

- குடியரசுத் தலைவருக்குப் பதவிப் பிரமாணம் செய்து வைப்பது உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி. அவர் இல்லையெனில் உச்ச நீதிமன்றத்தின் மூத்த நீதிபதி.

**குடியரசுத் தலைவரின் பதவி நீக்கம்**

- **சரத்து (61) :** குற்றவிசாரணை மூலம் அரசியல் அமைப்புச் சட்டத்தை மீறும் பொழுது பதவிநீக்கம் செய்யலாம்.
- குடியரசுத் தலைவரை பதவிநீக்க **14** நாட்கள் முன்னதாக அறிவிப்பு அனுப்ப வேண்டும்.
- நாடாளுமன்றத்தின் ஏதேனும் ஒரு அவையில், மொத்த உறுப்பினர்களில் ¼பங்கு உறுப்பினர் கையெழுத்துடன் தீர்மானம் கொண்டு வந்து,**2/3** பங்கு ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அடுத்த அவையில் விசாரணை நடைபெறும். விசாரணையின்போது அவர் அவையில் நேரில் விளக்கம் அளிக்கலாம்.
- விசாரணைக்குப் பின் அந்த அவையின் **2/3 பங்கு உறுப்பினர்** ஆதரவுடன் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் குடியரசுத் தலைவர் பதவி இழப்பார்.

**குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்**

குடியரசுத் தலைவரின் அதிகாரங்கள் கீழ்கண்டவாறு பிரிக்கப்பட்டுள்ளது.

1. நிர்வாக அதிகாரம்
2. சட்டமன்ற அதிகாரம்
3. நிதி அதிகாரம்
4. நீதி அதிகாரம்

5. இராஜாங்க அதிகாரம்
6. இராணுவ அதிகாரம்
7. நெருக்கடி நிலை அதிகாரம்

**நிர்வாக அதிகாரங்கள்**

- ❖ அரசாங்கத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்து நிர்வாக செயல்களும் இவரது பெயரிலேயே மேற்கொள்ளப்படுகிறது.
- ❖ இவரது பெயரில் வழங்கப்படும் உத்தரவுகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விதிகள் வகுக்கலாம்.
- ❖ மத்திய அரசாங்கத்தின் எளிதான நடைமுறைக்கு விதிகள் வகுக்க முடியும் மற்றும் அமைச்சர்களுக்கு தனது வேலைகளை ஒதுக்கீடு செய்யலாம்.
- ❖ இவர் பிரதமர் மற்றும் அமைச்சர்களை நியமிக்கிறார். அவர்கள், இவரின் விருப்பத்தின் பேரில் பதவியில் இருக்கின்றார்.
- ❖ இந்திய தலைமை வழக்கறிஞர் நியமனம் செய்கிறார். அவருடைய சம்பளம் மற்றும் இதர படிகளையும் முடிவு செய்கிறார். இவர் குடியரசுத் தலைவர் விருப்பத்தின் பெரிய விருப்பத்தின் பதவி வகிப்பார்.
- ❖ இந்திய தலைமை கணக்குத் தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டாளர், தலைமை தேர்தல் ஆணையர் மற்றும் ஆணையர்கள், மத்திய பணியாளர் தேர்வாணைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள், மாநில ஆளுநர்கள், நீதிக்குழுவின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோரை நியமிக்கிறார்.
- ❖ பிரதமரிடம் மத்திய அரசின் நிர்வாக விவகாரங்களையும் சட்டமன்ற அறிக்கைகளையும் பற்றிய தகவல்களை கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
- ❖ தாழ்த்தப்பட்ட பழங்குடியின் மற்றும் பின்தங்கிய பிரிவுகளுக்காக குழுவை அமைத்து அவர்களின் நிலைகளை ஆராயும்படி கேட்டுக் கொள்ளலாம்.
- ❖ இவர் மத்திய-மாநில உறவை வளர்க்கவும் ஒத்துழைப்பைப் பெருக்கவும் குழுவை அமைக்கலாம்.
- ❖ யூனியன் பிரதேசங்களில் நிர்வாகத் -தினை நேரடியாக நடத்தலாம். இவர் நிர்வாகிகளையும் நியமிக்கிறார். அவர்கள் ஆளுநர் அல்லது ஆணையாளர் ஆவர்.
- ❖ எந்த பகுதியையும் அட்டவணைப் -படுத்தப்பட்ட பகுதியாகவும் பழங்குடியின் பகுதியாகவும் அறிவிக்கலாம்.

**சட்டமன்ற அதிகாரம்:**

- ❖ குடியரசுத் தலைவர் என்பவர் நாடாளுமன்றத்தில் அதிகமாக

இருக்கிறார். இவருக்கு கீழ்கண்ட அதிகாரங்கள் உள்ளன.

1. நாடாளுமன்றத்தின் இரண்டு அவைகளையும் கூட்டவும் அல்லது ஒத்திவைக்கவும் மற்றும் மக்களவையை கலைக்கவும் இவரால் இயலும். மேலும் நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தினை இவர் சுட்டுகிறார். மக்களவை சபாநாயகர் அதனை வழி நடத்துகிறார்.
2. நாடாளுமன்ற பொதுத்தேர்தல் முடிந்து முதல் கூட்டத்தின் முதல் நாளிலும், வருடத்தில் முதல் கூட்டத்தின் முதல் நாளிலும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுகிறார்.
3. மசோதா நாடாளுமன்றத்தில் நிலுவையில் இருக்கும் பட்சத்தில் தனது தகவலை இரண்டு அவைகளுக்கும் தெரிவிக்கலாம்.
4. மக்களவை சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகர் இடம் காலியாக இருக்கும் பட்சத்தில் அமைப்பின் ஏதேனும் ஒரு உறுப்பினர் அவையை வழி நடத்துபவர் கேட்டுக் கொள்ளலாம். அதேபோல் மாநிலங்களையின் தலைவர் மற்றும் அவைத்தலைவர் இடம் காலியாக இருக்கும் போது அவையின் ஏதேனும் ஒரு உறுப்பினரை அமையவும் வழிநடத்துபவர் கேட்டுக் கொள்ளலாம்.
5. இவர் 12 உறுப்பினர்களை மாநிலங்களவையில் நியமனம் செய்கிறார். அவர்கள் இலக்கியம், அறிவியல், கலை மற்றும் சமூக சேவை ஆகிய துறைகளின் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.
6. 2 ஆங்கிலோ இந்தியன் உறுப்பினர்களாக மக்களவையில் நியமனம் செய்கிறார்.
7. தேர்தல் ஆணையத்துடன் கலந்தாலோசித்துப் பின் நாடாளுமன்ற உறுப்பினரின் தகுதியிழப்பை முடிவு செய்கிறார்.
8. நாடாளுமன்றத்தில் சிலவகையான மசோதாக்களை தாக்கல் செய்வதற்கு இவரது முன் அனுமதி தேவை. (எ.கா) இந்தியாவின் தொகுப்புத் திரள் நிதியிலிருந்து செலவு செய்தல். புதிய மாநிலங்கள் உருவாக்குதல்.
9. நாடாளுமன்றத்தில் இரண்டு அவைகளிலும் நிறைவேற்றப்பெற்ற ஒரு மசோதா இவரிடம் வந்தால்
   - அம்மசோதாவிற்கு சம்மதம் தெரிவிக்கலாம்
   - அம்மசோதாவினை சம்மதம் தெரிவிப்பதை நிறுத்திவைக்கலாம்.
   - நாடாளுமன்றத்திற்கே மறுபரி -சீலனைக்காக திருப்பி அனுப்பலாம் (பணமசோதாவாக இல்லாத பட்சத்தில்)

- இங்கு நாடாளுமன்றம் மீண்டும் குடியரசுத் தலைவருக்கு சம்மதம் பெற அனுப்பினால் அதற்கு அவர் கட்டாயம் சம்மதம் தெரிவிக்க வேண்டும்.

10. மாநில ஆளுநரால், மாநில சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட ஒரு மசோதா குடியரசுத் தலைவரின் பார்வைக்கு அனுப்பப்படுமாயின் குடியரசுத் தலைவர் அதற்கு
    - அனுமதி வழங்கலாம்
    - அனுமதி வழங்குவதனை நிறுத்திவைக்கலாம்.
    - மாநில சட்டப்பேரவைக்கு மறுசீலனைக்காக மாநில ஆளுநர் திருப்பி அனுப்பும்படி வழி காட்டலாம்.

❖ இங்கு கவனிக்கப்பட வேண்டிய ஒன்று மாநில சட்டசபை மீண்டும் அரசு மசோதாக்களை நிறைவேற்றி அனுப்பினால் அதற்கு குடியரசுத் தலைவர் அனுமதி வழங்க வேண்டும் என்று கட்டாயம் கிடையாது. மீண்டும் மறுபரிசீலனைக்கு அனுப்பலாம்.

❖ நாடாளுமன்றம் கூட்டம் இல்லாத நேரத்தில் அவசரச்சட்டம் இயற்றலாம். அந்த அவசரச்சட்டம் நாடாளுமன்றம் தொடங்கியதில் இருந்து ஆறு வாரத்துக்குள் ஒப்புதல் பெற வேண்டும். இந்த அவசர சட்டத்தினை எந்த நேரத்திலும் திரும்பப் பெறுவர்.

❖ இந்திய கணக்கு தணிக்கை மற்றும் கட்டுப்பாட்டாளர், மத்திய பணியாளர் தேவைகளையும், நிதி ஆணையம் போன்றவைகளின் அறிக்கைகளை நாடாளுமன்றத்தின் முன் சமர்ப்பிப்பார்.

❖ அமைதி, வளர்ச்சி மற்றும் நவீன அரசு ஆகியவைகள் அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகள், லட்சத்தீவு, தாத்ரா மற்றும் நாகர்ஹவேலி மற்றும் டாமன் மற்றும் டையூ ஆகிய பகுதிகளில் வர ஒழுங்குமுறைகளை உருவாக்கலாம். இதேபோல் புதுச்சேரியிலும் உருவாக்கலாம். ஆனால் அப்போது சட்டசபை கலைந்து இருந்தால் மட்டும்.

**நிதி அதிகாரம்**

❖ பண மசோதா இவருடைய ஒப்புதலை பெற்ற பின்பு தான் நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட வேண்டும்.

❖ மத்திய நிதியை அறிக்கையை நாடாளு -மன்றத்தின் முன் சமர்பிக்கிறார்.

❖ இவருடைய ஒப்புதல் இல்லாமை எந்த மாநில கோரிக்கையும் எழுப்ப முடியாது.

❖ தவிர்க்க முடியாத அல்லது எதிர்பாராத செலவுக்காக எதிர்பாரா செலவு நிதியத்தில் பணம் இவரின் பெயரில் வைக்கப்படுகிறது.

- நிதி ஆணையத்தை ஐந்து வருடத்திற்கு ஒருமுறை அமைக்கிறார். மத்திய மாநில அரசுகளுக்கிடையே வருவாய் பகிர்வு பற்றிய அறிக்கை சமர்பிக்கிறார்.

**நீதி அதிகாரம்**

- உச்ச நீதிமன்ற மற்றும் உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மற்றும் நீதிபதிகளை நியமிக்கிறார்.
- சட்டத்தில் ஏதேனும் சந்தேகம் இருப்பின் உச்ச நீதிமன்றத்தில் ஆலோசனை கேட்கலாம். ஆனால் அந்த ஆலோசனை குடியரசுத் தலைவரை கட்டுப்படுத்தாது.
- இவர் குற்றவாளியை மன்னிக்கலாம், தண்டனை மாற்றம் செய்யலாம். தண்டனை குறைப்பு செய்யலாம். தண்டனை வழங்குவதை தாமதிக்கலாம் அல்லது ஒத்திவைக்கலாம் மற்றும் தண்டனையை நிறுத்திவைக்கலாம்.

**கீழ்க்கண்டவற்றில் குற்றம் சாட்டப்பட்டர்வளுக்கு இது பொருந்தும்:**

1. இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டவர்.
2. மத்திய அரசின் சட்டத்தினால் தண்டிக்கப்பட்டவர்
3. மரண தண்டனை பெற்றவர்.

**இராஜாங்க அதிகாரம்**

வெளிநாட்டு ஒப்பந்தங்கள் குடியரசுத் தலைவரின் சார்பாக கையெழுத்தாகிறது. இருப்பினும் அவை நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெற வேண்டியது அவசியம் உள்ள விவகாரங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் இந்தியாவின் பிரதிநிதியாக செயல்படுகிறார். தூதர்களையும், உயர்ஆணையர்களையும் நியமிக்கிறார்.

**இராணுவ அதிகாரம்**

இந்தியாவின் பாதுகாப்பு படைகளின் தலைவர் ஆவார். இவர் கப்பற்படை, விமானப்படை மற்றும் போர்ப்படைத் தளபதிகளை நியமிக்கிறார். நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன் போரை அறிவிக்கவும் போரை நிறுத்தவும் செய்கிறார்.

**நெருக்கடிநிலை அதிகாரங்கள்**

- இதுவரையில் குடியரசுத் தலைவரின் பொதுவான அதிகாரங்களை பார்த்தோம். இது அவருடைய சிறப்பு அதிகாரமாகும். அரசியலமைப்புச் சட்டம் அபரிமிதமான அதிகாரத்தினை வழங்கியுள்ளது.

1. தேசிய நெருக்கடி நிலை (சரத்து 352)
2. குடியரசுத் தலைவர் ஆட்சி (சரத்து 356 மற்றும் 365)
3. நிதி நெருக்கடி (சரத்து 360)

**குடியரசுத் தலைவரின் வீட்டோ (ரத்து) செய்யும் அதிகாரம்**

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவை குடியரசுத் தலைவரின் ஒப்புதல் கையொப்பம் பின்னர்தான் அது சட்டமாகிறது. அவ்வாறு குடியரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பும் பொழுது அவருக்கு மூன்று மாற்று வழிமுறைகள் உள்ளன. (அரசியலமைப்பின்படி சரத்து 111ன் கீழ்)

1. அனுமதி அளிக்கலாம்
2. நிறுத்தி வைக்கலாம்
3. பண மசோதாவாக இல்லாத பட்சத்தில் மறுபரிசீலனை செய்யுமாறு நாடாளுமன்றத்திற்கு திருப்பி அனுப்பலாம்.

- இருப்பினும், அவ்வாறு மறுபரிசீலனை செய்ய திருப்பி அனுப்பும்போது, நாடாளுமன்றம் அந்த மசோதாக்களின் மாறுதல் செய்தோ, செய்யாமலோ ஒப்புதலுக்கு அனுப்பினால் அதற்கு ஒப்புதல் வழங்கியாக வேண்டும்.
- மசோதா நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்படலாம், பின்பும் அதை ரத்து செய்ய குடியரசுத்தலைவர் அதிகாரம் பெற்றுள்ளார். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.

1. நாடாளுமன்றத்தால் அவசர அவசரமாகவும் சரியான முறையில் விவாதம் நடந்தாலும் நிறைவேற்றப் -பட்ட சட்டத்தினை தடுத்தல்
2. அரசியலமைப்பு சட்டத்திற்கு எதிராக இருக்கும் சட்டத்தினை தடுத்தல்.

**நான்கு விதமாக ரத்து அதிகாரம் வகைப்படுத்தப்பட்டுள்ளது.**

1. முழுமையான ரத்து: நாடாளுமன்றத் -தால் நிறைவேற்றப்பட்ட மசோதா -விற்கு அனுமதி அளிப்பதை நிறுத்திவைத்தல்.
2. வரையறுக்கப்பட்ட ரத்து: நாடாளு -மன்றத்தில் அதிகபட்சபெரும்பான்மை பெறுவதன் மூலம் ரத்து செய்யக் -கூடியது.
3. தற்காலிக ரத்து: நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை பெறுவதன் மூலம் ரத்து செய்யக்கூடியது.
4. தாமதப்படும் ரத்து: நாடாளுமன்றத் -தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவின் மீது எந்த நடவடிக்கையும் எடுக்காது இருத்தல்

மேற்கண்ட நான்கில் இந்திய குடியரசுத் தலைவர் மூன்று மட்டுமே பெற்றுள்ளார். இதில் வரையறுக்கப்பட்ட ரத்து இந்திய குடியரசுத் தலைவருக்குக் கிடையாது. ஆனால் இது அமெரிக்க குடியரசுத் தலைவருக்கு உண்டு. மீதம்

மூன்று ரத்து அதிகாரங்களும் கீழ் வருமாறு:

**முழுமையான ரத்து அதிகாரம்**

நாடாளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்ட மசோதாவிற்கு குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமல் நிறுத்திவைத்தலை இது குறிப்பிடுகின்றது. இந்த மசோதா சட்டமாகாமலேயே முடிவு பெறும். பொதுவாக இரண்டு தருணங்களில் இவ்வாறு செய்யப்படும்.

1. தனிநபர் மசோதாவாக இருந்தால் (அமைச்சர் அல்லாத ஏதேனும் நாடாளுமன்ற உறுப்பினர்).
2. மத்திய அமைச்சரவை இராஜினாமா செய்யும் நேரத்தில் உள்ள அரசாங்க மசோதாக்களால் இருந்தால் புதிய அமைச்சரவை, குடியரசுத் தலைவர் அந்த மசோதாக்களில் ஒப்புதல் அளிக்க வேண்டாம் என்று ஆலோசனை வழங்கும்.

**தற்காலிக ரத்து அதிகாரம்**

❖ நாடாளுமன்றத்திற்கு மசோதாவை திருப்பி அனுப்பி மறுபரிசீலனை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுதல். இருப்பினும் நாடாளுமன்றம் அந்த மசோதாவில் ஏதேனும் மாற்றம் செய்தாலோ அல்லது செய்யாமலோ மீண்டும் குயடிரசுத் தலைவரின் ஒப்புதலுக்கு அனுப்பினால் அதற்கு கட்டாயம் ஒப்புதல் தந்தே ஆகவேண்டும். இங்கு குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரம் நாடாளுமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையால் ரத்து செய்யப்படுகிறது.

❖ இதில் பண மசோதாவில் குடியரசுத்தலைவர் இந்த ரத்து அதிகாரத்தினை பயன்படுத்த முடியாது. பண மசோதாவைப் பொறுத்த வரையில் குடியரசுத் தலைவர் ஒப்புதல் அளிக்காமலேயே வைத்துக் கொள்ளலாம் அல்லது ஒப்புதல் அளிக்க வேண்டும். திருப்பி மறுபரிசீலனைக்கு அனுப்ப முடியாது. காரணம் இவருடைய ஒப்புதலினால் தான் இம்மசோதா நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

**தாமதப்படுத்தும் அதிகாரம்**

❖ குடியரசுத் தலைவர் மசோதாவை ரத்தும் செய்யாமல் மறுபரிசீலனைக்கு திருப்பியும் அனுப்பாமல் எவ்வளவு காலம் வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம். இந்திய அரசியலமைப்புச் சட்டம் இதற்கு காலக்கெடு ஏதும் நிர்ணயிக்கவில்லை. அமெரிக்காவில் இவ்வகை ரத்து அதிகாரத்திற்கு குடியரசுத் தலைவர் 10 நாட்களுக்குள் மறுபரிசீலனைக்கு அனுப்ப வேண்டும்.

- இந்த தாமதப்படுத்தும் ரத்து அதிகாரத்தில் அமெரிக்க குடியரசுத் தலைவரை விட இந்திய குடியரசுத் தலைவருக்கு மிகுந்த அதிகாரம் உண்டு.

**மாநில சட்டப்பேரவையின் மீது குடியரசுத் தலைவரின் ரத்து அதிகாரம்:**

- மாநில சட்டப்பேரவை இயற்றும் சட்டங்களின் மீதும் குடியரசுத் தலைவருக்கு ரத்து அதிகாரம் உள்ளது. ஒரு மசோதா மாநில சட்டசபையினால் நிறைவேற்றப்பட்ட பின்பு ஆளுநர் அல்லது குடியரசுத் தலைவர் ஆகியோரின் ஒப்புதல் பெற்ற பின்னரே அது சட்டமாகிறது.
- மாநில சட்டசபையில் நிறைவேற்றப் -பட்ட மசோதா ஆளுநரின் ஒப்புதல் பெற்ற பின்பு சட்டமாகிறது. இங்கு சரத்து 200 ன்படி ஆளுநருக்கு நான்கு மாற்று அதிகாரங்கள் உள்ளன.
    - ஒப்புதல் அளிக்கலாம்.
    - ஒப்புதல் வழங்குவதை நிறுத்தி வைக்கலாம்.
    - பண மசோதாவாக இல்லாமல் இருந்தால் மறுபரிசீலனைக்கு திருப்பி அனுப்பலாம்.
    - குடியரசுத் தலைவருக்கு அனுப்பி வைக்கலாம்.

1. அவசரச் சட்டம் இயற்றும் பொழுது நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் அமர்வில் இருத்தல் வேண்டும். அவசரச் சட்டம் ஏதேனும் ஒரு அவை அமர்வில் இருந்தாலும் குடியரசுத்தலைவரால் இயற்ற முடியும். ஏனெனில் இரண்டு அவைகளில் நிறைவேற்றினால் மட்டுமே அது சட்டமாகும். இரண்டு அவைகளும் அமர்வில் இருக்கும்போது அவசரச் சட்டம் இயற்றினால் அது செல்லாதாகிவிடும்.

2. தற்போதைய சூழ்நிலை உடனடியாக அவசரச் சட்டம் இயற்ற வேண்டிய சூழ்நிலை என்று குடியரசுத்தலைவர் மனநிறைவு கொள்ள வேண்டும். கூப்பர் வழக்கில் (1970) உச்ச நீதிமன்றம் குடியரசுத் தலைவர் மனநிறைவு என்பதனை நீதிமன்றம் கேள்வி எழுப்ப முடியும் என்றது. காரணம் குடியரசுத் தலைவர் அவசரச் சட்டம் இயற்ற வேண்டும் என்பதற்காகவே நாடாளுமன்றக் கூட்டத் தொடரினை முடிவுக்கு கொண்டு வந்தால் அது நாடாளுமன்ற நடைமுறைகளை மீறிய செயலாகும் என்றது. 1975 ல் 38 வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் குடியரசுத்தலைவரின் மனநிறைவு **இறுதியானது** மற்றும் அதனை

நீதிமன்ற மறு ஆய்வுக்கு உட்படுத்த முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் 1978-ல் 44-வது அரசியலமைப்புச் சட்டத்திருத்தத்தில் இது ரத்து செய்யப்பட்டது. இப்பொழுது குடியரசுத் தலைவரின் மனநிறைவு என்பது நீதிமன்ற மறு ஆய்வுக்கு உட்பட்டதாகும்.

3. இவருடைய அவசரச்சட்டம் இயற்றும் அதிகாரம், நாடாளுமன்றத்தின் **சட்டமியற்றும்** அதிகாரத்தினை ஏற்றது. ஆனால் இரண்டு நிபந்தனைகள் உண்டு.
   - அவசர சட்டம் என்பது நாடாளுமன்றத்தால் சட்டமியற்றும் பிரிவுகளுக்குள் இருக்க வேண்டும்.
   - அவசரச் சட்டத்திற்கு சில அரசியலமைப்பு வரையறைகள் உள்ளது. அவசரச் சட்டத்தால் அடிப்படை உரிமைகளுக்கு எந்த பாதிப்பும் ஏற்படக் கூடாது.

❖ அனைத்து அவசரச் சட்டங்களுமே நாடாளுமன்றக் கூட்டத் தொடர் நடப்பில் இல்லாத பொழுது கொண்டுவரப்படுகிறது.

❖ கூட்டத்தொடர் ஆரம்பித்தவுடன் நாடாளுமன்றம் முன் அவசரச் சட்டம் சமர்பிக்கப்படும். நாடாளுமன்றம் இதை சம்மதித்தால் அது சட்டமாகும். ஒருவேளை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் ஆறுவாரங்களில் இது காலாவதியாகிவிடும். இங்கு ஆறு வாரங்கள் என்பது இரு அவைகளும் கூடிய தேதி ஆகும். இரண்டாவது அவை தாமதமாக தொடங்கினாலும் அத்தேதியையே கணக்கில் கொள்ளப்படுகிறது. நாடாளுமன்றம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று தீர்மானம் கொண்டு வந்தால், இது காலாவதியாகும். ஒரு அவசரச் சட்டத்தின் அதிக பட்ச செயல்நாட்கள் ஆறு மாதமும், ஆறு வாரங்களும் ஆகும். ஆறுமாதங்கள் என்பது இரண்டு கூட்டத்தொடருக்கு இடையே உள்ள இடைவெளி.

❖ குடியரசுத் தலைவர் எந்த நேரத்திலும் அவசரச் சட்டத்தினை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அவசரச் சட்டம் இயற்றும் அதிகாரம் குடியரசுத் தலைவரின் எதேச்சதிகாரம் கிடையாது. அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைப்படி செயல்படுகிறார்.

❖ மற்ற சட்டங்களைப் போன்று பின்தேதியிட்ட சட்டமாக செல்லக் கூடியது. நாடாளுமன்றம் இயற்றிய சட்டங்களை திருத்தம் செய்யலாம். வரி சம்மபந்தமான சட்டங்களை கொண்டு வரலாம். ஆனால் அரசியலமைப்புச் சட்டத்திருத்தம் கொண்டு வரமுடியாது.

❖ இத்தகைய அவசரச் சட்டமியற்றும் அதிகாரம் இங்கிலாந்திலோ அல்லது அமெரிக்காவிலோ இல்லை. இதில் அவசரச் சட்டம் இயற்றும் அதிகாரத்திற்கும் நெருக்கடி நிலை பிரகடத்திற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

❖ இதுநாள் வரையில் அவசர சட்டத்தினை மீண்டும் மீண்டும் இயற்றியதற்கு எந்த வழக்கும் உச்சநீதிமன்றத்திடம் வரவில்லை.

❖ இருப்பினும் வத்வா வழக்கில் (1987) நீதிமன்றம் கூறியதாவது" அவசரச் சட்டத்தில் எவ்வித திருத்தமும் இல்லாமல் மீண்டும் மீண்டும் இயற்றி சட்டசபையில் நிறைவேற்றாமல் இருப்பின், அது அரசியலமைப்புச் சட்டத்தினை மீறியதாகும்.

## குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரம்:

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சரத்து 72 குடியரசுத் தலைவருக்கு மன்னிக்கும் அதிகாரத் -தினை வழங்கியுள்ளது.

1. மத்திய சட்டத்தினால் தண்டனை பெற்றவரின் குற்றம்.
2. இராணுவ நீதிமன்றத்தால் தண்டிக்கப் பெற்றவரின் குற்றம்.
3. மரண தண்டனை பெற்றவரின் குற்றம்

❖ குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரம் என்பது நிர்வாக அதிகாரம் இதை எதிர்த்து நீதிமன்றத்தில் வழங்குத் தொடர முடியாது. இந்த அதிகாரத்தின் நோக்கம் இரண்டாகும்.

- நீதிமன்ற தவறுகளைச் சரிசெய்தல்
- கடுமையான தண்டனைகளிலிருந்து விலக்கு அளித்தல்.

### 1. மன்னித்தல்

தண்டனைகளையும் குற்றங்கள் அனைத்தையும் நீக்கிவிட்டு மன்னித்தல்

### 2. தண்டனை மாற்றம்

மிகக்கடுமையான தண்டணையிலிருந்து எளிமையான தண்டனைக்கு மாற்றுதல் எ.கா. மரண தண்டனையிலிருந்து கடுங்காவல் தண்டனையாக குறைத்து மாற்றுதல்

### 3. தாமதித்தல் அல்லது ஒத்திவைத்தல்

❖ குற்றவாளியின் உடல் நலம் குறைவு அல்லது பெண் குற்றவாளியின் கர்ப்பம் போன்ற காரணங்களால் தண்டனையை தற்பொழுது அளிக்காமல் சில காலம் தாமதித்தல் அல்லது ஒத்திவைத்தல்

### 4. நிறுத்திவைத்தல்

❖ தண்டனை நிறைவேற்றுவதை (குறிப்பாக மரண தண்டனையை) தற்காலிகமாக நிறுத்திவைத்தல். இது

குற்றவாளி குடியரசுத் தலைவரிடம் மன்னித்தல் அல்லது தண்டனை மாற்றம் கோர வசதியாக அமையும்.

- ❖ இதேபோல் அரசியலமைப்புச் சட்டம் சரத்து 161 ல் ஆளுநர் மாநில சட்டங்களினால் தண்டிக்கபெற்ற ஒரு குற்றவாளியை மன்னிக்கலாம். தண்டனை மாற்றம் செய்யலாம், தண்டனை குறைப்பு செய்யலாம். தாமதித்தால் அல்லது ஒத்திவைக்கலாம் மற்றும் நிறுத்திவைக்கலாம்.
- ❖ இதனால் ஆளுநரின் மன்னிக்கும் அதிகாரமானது குடியரசுத் தலைவரின் மன்னிக்கும் அதிகாரத்திலிருந்து வேறுபடுகிறது.
- இராணுவ நீதிமன்றத்தால் தண்டனை பெற்ற குற்றவாளியை குடியரசுத் தலைவரால் மட்டுமே மன்னிக்க முடியும். ஆளுநரால் மன்னிக்க முடியாது.
- குயடிரசுத் தலைவர் மரணதண்டனை கைதியை மன்னிக்கலாம். ஆனால் ஆளுநரால் அது முடியாது ஆனால் ஆளுநர் மரணதண்டனை கைதியின் தண்டனையை குறைக்கலாம் அல்லது மாற்றலாம்.

**இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் குடியரசுத்தலைவரின் நிலை**

- ❖ இந்திய அரசியலமைப்புச் சட்டம் நமக்கு நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்தை வழங்கியுள்ளது. இதில் குடியரசுத் தலைவர் என்பவர் பெயரளவையிலான நிர்வாகத் தலைவராவார். உண்மையான நிர்வாகத் தலைவர் என்பது பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவாகும். இங்கு குடியரசுத் தலைவர் அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைபடியே தனது அதிகாரத்தினை செய்கிறார்.
- ❖ சரத்து 53, 74 மற்றும் 75 ஆகியவை குடியரசுத் தலைவரின் நிலையை தெளிவாக வகுத்துள்ளது.
- சரத்து 53 ன்படி மத்திய நிர்வாக அதிகாரம் அனைத்தும் குடியரசுத் தலைவரிடம் உள்ளது. அவர் அதனை நேரடியாகவோ அல்லது அதிகாரிகள் வழியாகவோ செயல்படுத்தலாம்.
- சரத்து 74 ன்படி பிரதமர் தலைமையிலான அமைச்சர்கள் குழுவின் ஆலோசனை மற்றும் உதவியின்படி குடியரசுத் தலைவர் செயல்படவேண்டும்.
- சரத்து 75ன்படி அமைச்சர்கள் குழு மக்களவைக்கும் பொறுப்பானவர்கள் ஆவர். இது நாடாளுமன்ற முறையிலான அரசாங்கத்திற்கு அடித்தளமாகும்.
- ❖ 1976ல் 42வது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் குடியரசுத் தலைவர் பிரதமர் தலைமையிலான

அமைச்சர்கள் குழுவின் ஆலோசனைபடியே நடக்க வேண்டும் என்று சேர்க்கப்பட்டது. 1978ல் 44வது அரசியலமைப்புச் சட்டத்தின் குடியரசுத் தலைவர் அமைச்சர்கள் குழுவின் முடிவை மறுபரிசீலனை செய்ய பரிந்துரைக்கலாம் என்று சேர்க்கப்பட்டது. ஆனால் மீண்டும் அமைச்சர்கள் குழு அனுப்பினால் அதை ஏற்றுக் கொண்டுதான் ஆகவேண்டும்.

- ❖ குடியரசுத் தலைவருக்கு அரசியலமைப்பு ரீதியாக எதேச்சியதிகாரம் கிடையாது. ஆனால் சூழ்நிலை ரீதியாக எதேச்ச அதிகாரம் உண்டு. அவையாவன,
  - மக்களவையில் பெரும்பான்மை இல்லாத பட்சத்தில் பிரதமரை நியமித்தல் அல்லது பிரதமர் பதவியில் இருக்கும் பொழுது இறந்தால் புதிய பிரதமரை தேர்ந்தெடுத்து நியமித்தல்
  - மக்களவையில் அமைச்சர்கள் குழு நம்பிக்கைப் பெறவில்லை என்றால் ஆட்சியை விட்டு நீக்குதல்
  - மக்களவையில் பெரும்பான்மையை அமைச்சர்கள் குழு இழந்தால் அவையைக் கலைத்தல்.

**இந்திய குடியரசுத் தலைவர்கள்:**

| | | |
|---|---|---|
| **1. டாக்டர் இராஜேந்திர பிரசாத்** | **1950 - 1962** | **அதிக நாட்கள் இருந்தவர்** |
| **2. டாக்டர் இராதா கிருஷ்ணன்** | 1962 - 1967 | |
| **3. டாக்டர் ஜாகீர் ஹுசைன்** | 1967 - 1969 | குறைந்த நாட்கள் இருந்தவர், முதல் முஸ்லீம் குடியரசுத் தலைவர் முதல் பொறுப்பு குடியரசுதலைவர் |
| **4. வி.வி. கிரி** | மே 1969 - ஜுலை 1969 | |
| **5. ஜஸ்டிஸ் முகம்மது இதயதுல்லா (பொறுப்பு)** | ஜுலை 1969 - ஆகஸ்டு 1969 | அலுவலகத்தில் இறந்தவர் |
| **6. வி.வி. கிரி** | 1969 - 1974 | எதிர்ப்பின்றி தேர்ந்தெடுக்கபட்டவர், |
| **7. பக்ருதீன் அலி அகமது** | 1974 - 1977 | குறைந்த வயதில் ஆனவர் |
| **8. பி.டி. ஜாட்டி (பொறுப்பு)** | மே 1977 - ஜுலை 1977 | முதல் சீக்கியர் வயதானவர் |

| | | |
|---|---|---|
| **9. நீலம் சஞ்சீவ ரெட்டி** | 1977 - 1982 | |
| **10. கியானி ஜெயில் சிங்** | 1982 - 1987 | |
| **11. ஆர். வெங்கட்ராமன்** | 1987 - 1992 | |
| **12. டாக்டர் சங்கர் தயாள் சர்மா** | 1992 - 1997 | |
| **13. கே. ஆர். நாராயணன்** | 1997 - 2002 | |
| **14. டாக்டர். ஏ.பி.ஜே. அப்துல் கலாம்** | 2002 - 2007 | |
| **15. பிரதீபா தேவி சிங் பாட்டீல்** | 2007 - 2012 | முதல் அறிவியல் அறிஞர் முதல் பெண் குடியரசு தலைவர் |
| **16.பிரணாப் முகர்ஜி** | 2012 - தற்போது வரை | |

**துணை குடியரசுத் தலைவர்**

- **சரத்து (63):** இந்திய துணை குடியரசுத் தலைவர் ஒருவர் இருக்க வேண்டும் என்று கூறுகிறது.
- **சரத்து (64):** துணை குடியரசுத் தலைவர் மாநிலங்களவையின் தலைவராக இருக்க வேண்டும்.

**<u>துணைக்குடியரசு தலைவராவதற்கான தகுதிகள்:</u>**

பின்வரும் தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்

1. இந்திய குடிமகனாக, குடிமகளாக இருத்தல் வேண்டும்.
2. 35 வயது பூர்த்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
3. இராஜ்யசபாவில் உறுப்பினராவதற் -குரிய தகுதிகளை பெற்றிருக்க வேண்டும்.
4. மத்திய மற்றும் மாநில அரசின் கீழ் ஊதியம் பெறும் பதவியில் இருக்கக் கூடாது.
5. சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டவராக இருத்தல் கூடாது.

**<u>குடியரசுத் துணைத்தலைவரின் உறுதிமொழி</u>**

குடியரசுத் தலைவரோ அல்லது குடியரசுத் தலைவரால் நியமிக்கப்படும் ஒருவரோ இவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைப்பார். தனது உறுதிமொழியில் அரசியலமைப்பு சட்டத்திற்கு உண்மையாகவும் அதனை பின்பற்றி நடப்பதாகவும், தன் அலுவலகத்திற்கு உண்மையாகவும் இருப்பதாகவும் உறுதி கூறுகிறார்.

| இந்திய துணைக் குடியரசுத்தலைவர்கள் | |
|---|---|
| 1. டாக்டர் இராதா கிருஷ்ணன் | 1952 - 1962 |
| 2. டாக்டர் ஜாகீர் ஹுசைன் | 1962 - 1967 |
| 3. வி.வி. கிரி | 1967 - 1969 |
| 4. ஜி.எஸ். பதக் | 1969 - 1974 |
| 5. பி.டி. ஜாட்டி | 1974 - 1979 |
| 6. முகமது இதயதுல்லா | 1979 - 1984 |
| 7. ஆர். வெங்கட்ராமன் | 1984 - 1987 |
| 8. சங்கர் தயாள் சர்மா | 1987 - 1992 |
| 9. கே. ஆர். நாராயணன் | 1992 - 1997 |
| 10. கிருஷ்ண காந்த் | 1997 - 2002 |
| 11. பைரோவன்சிங் செகாவத் | 2002 - 2007 |
| 12. முகமது ஹமீது அன்சாரி | 2007 - இன்று வரை |

## அலுவலகத்தின் வரையறைகள்

அரசியலமைப்புச் சட்டத்தின்படி துணை குடியரசுத் தலைவர் இரண்டாவது உயர்ந்த இடத்தை பெறுகிறார். இதன்படி,

1. நாடாளுமன்றத்திலோ மாநில சட்ட-மன்றத்திலோ உறுப்பினராக இருத்தல் கூடாது
2. வேறு எங்கும் அரசு ஆதாயம் தரும் பணியில் இருக்கக் கூடாது

- குடியரசுத் தலைவரின் பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். மேலும் மறு தேர்தலுக்கும் போட்டியிடலாம். இவர் தனது பதவி விலகல் கடிதத்தை குடியரசு தலைவரிடம் கொடுத்த பின்னரே பதவி விலக இயலும் (இவர் விருப்பப்படின்)
- மாநிலங்களவையில் தீர்மானம் இயற்றி அதன் மூலம் இவரை பதவி நீக்கம் செய்யலாம். ஆனால் இத்தீர்மானத்-திற்கு பெரும்பான்மையான ஆதரவு இராஜ்யசபாவில் அளிக்கப்பட வேண்டும். பிறகு மக்களவைக்கும் அனுப்பப்படும்.

### துணைக் குடியரசுத் தலைவர்

1. மாநிலங்களவையின் முன்னாள் உத்தியோகத் தலைவராகச் செயல்படுகிறார். மக்களவை சபாநாயகராகச் செயல்படுகிறார்.
2. மாநிலங்களவை கூட்டத் தலைவரா-கவோ (அல்லது) மக்களவை சபாநாயகராகவோ செயல்படுவ-தில்லை.
3. அரசியலமைப்பு வழங்கப்பட்ட வழிகளின் கீழ் நீக்கப்பட முடியும்.

## பிரதமர்

- பிரதம அமைச்சர் அரசாங்கத்தின் உண்மையான தலைவர். அவர்தான் நிர்வாகத்துறையின் தலைவராவார்.
- இவர் திட்டக்குழுவிற்கும், தேசிய வளர்ச்சிக் குழுவிற்கும் தலைவராக விளங்குகிறார்.
- **சரத்து (75):** இந்திய குடியரசுத் தலைவர் இந்தியாவின் பிரதம அமைச்சரை நியமிக்கிறார்.
- பிரதமராக தேர்ந்தெடுக்கப்படுபவர் பாராளுமன்றத்தின் ஏதாவது ஒரு அவையில் உறுப்பினராக இருந்தால் போதுமானது.
- பாராளுமன்றத்தின் இரு அவைகளிலும் உறுப்பினர் அல்லாதவர்கூட பிரதமராக தேர்வு செய்யப்படலாம். ஆனால் அவர் **ஆறு மாத காலத்திற்குள்** பாராளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் படவேண்டும். இந்தியாவில் முதன்முதலாக இராஜ்ய சபாவிலிருந்து இந்திரா காந்தி 1966ம் ஆண்டு பிரதமராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.
- பிரதமர் மக்களவையின் நம்பிக்கையைப் பெற்றிருக்கும் வரை ஆட்சியில் தொடரலாம்.
- நாடாளுமன்றத்தையும், நிர்வாகத் துறையையும் ஒரு சேரக் கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் மிக்கவராகப் பிரதமர் திகழ்கிறார்.
- இந்தியாவின் முதல் துணைப் பிரதமர் சர்தார் வல்லபாய் பட்டேல்.

**கடமைகள் சரத்து (78):**

- இந்தியாவின் பிரதமர் மத்திய அரசாங்கத்தின் நிர்வாகம் தொடர்பாகவும், பாராளுமன்றத்தின் முன் கொண்டு வரப்பட வேண்டிய மசோதாக்களைப் பற்றியும் அமைச்சரவை எடுத்த முடிவுகளை குடியரசுத் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டும். மேற்கண்ட நிர்வாகம், சட்டமியற்றல் தொடர்பாக குடியரசுத் தலைவர் கேட்கக் கூடிய விவரங்களை அவருக்குத் தெரிவிக்க வேண்டும்.
- ஏதேனும் ஒரு விஷயத்தில் ஓர் அமைச்சர் மேற்கொண்ட முடிவை, அமைச்சரவையின் முன் வைக்க வேண்டுமென குடியரசுத் தலைவர் கோரும் போது அவ்வாறே செய்ய வேண்டும்.

**அதிகாரங்கள்:**

- குடியரசுத் தலைவரால் அமைச்சர் -களாக நியமிக்கப்படும் நபர்களை பிரதமர் பரிந்துரைக்கிறார். பிரதமர் பரிந்துரைக்கும் நபர்களை மட்டுமே குடியரசுத் தலைவர் அமைச்சர்களாக நியமனம் செய்ய முடியும்.
- பிரதமர் அமைச்சர்களிடையே துறைகளைப் பகிர்ந்து அளிக்கிறார்.
- அமைச்சரவையை மாற்றி அமைக்கவும், மறுமாற்றம் செய்யவும்

அதிகாரம் உடையவர். பின்வரும் அலுவலர்களின் நியமனம் தொடர்பாக குடியரசுத் தலைவருக்கு அவர் ஆலோசனை வழங்குகிறார்.

1. இந்திய அரசுத் தலைமை வழக்கறிஞர்
2. இந்திய கணக்காய்வு மற்றும் தணிக்கைத் துறைத் தலைவர்
3. மத்திய பொதுப்பணி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்
4. தேர்தல் ஆணையாளர்கள்
5. நிதி ஆணையத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள்

4. திட்டக்குழு, தேசிய வளர்ச்சி மன்றம், தேசிய ஒருமைப்பாடு மன்றம் மற்றும் மாநிலங்களுக்கிடையிலான மன்றம் ஆகியவற்றின் தலைவராக செயல்படுகிறார்.

**இந்தியப் பிரதமர்கள் மற்றும் அவர்களின் பதவிக்காலம்**

| | |
|---|---|
| 1. ஜவஹர்லால் நேரு | 1947 - 1964 |
| 2. குல்சாரிலால் நந்தா | மே 1964 - ஜுன் 1964 |
| 3. லால் பகதுார் சாஸ்திரி | 1964 - 1966 |
| 4. குல்சாரிலால் நந்தா | 11.01.1966 - 24.01.1966 |
| 5. இந்திரா காந்தி | 1966 -1977 |
| 6. மொராஜி தேசாய் | 1977 - 1979 |
| 7. சரண் சிங் | 1979 - 1980 |
| 8. இந்திரா காந்தி | 1980 - 1984 |
| 9. இராஜிவ் காந்தி | 1984 - 1989 |
| 10. வி.பி. சிங் | 1989 - 1990 |
| 11. சந்திர சேகர் | 1990 - 1991 |
| 12. நரசிம்மராவ் | 1991 - 1996 |
| 13. அடல் பிஹாரி வாஜ்பாய் | 16.5.1996 - 01.6.1996 |
| 14. தேவகௌடா | 1996-1997 |
| 15. ஐ.கே. குஜ்ரால் | 1997-98 |
| 16. அடல் பிஹாரி வாஜ்பாய் | 1998-2004 |
| 17. டாக்டர் மன்மோகன் சிங் | 2004-2014 |
| 18. நரேந்திர மோடி | 2014 - இன்று வரை |

**ஊதியங்கள் மற்றும் இதர படிகள்**

| | | | |
|---|---|---|---|
| **குடியரசுத் தலைவர்** | **1,50,000** | **துணைக் குடியரசுத் தலைவர்** | **1,25,000** |
| **பிரதமர்** | 1,00,000 | ஆளுநர் | 1,10,000 |
| **உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி** | 1,00,000 | மற்ற உச்சநீதி மன்ற நீதிபதிகள் | 90,000 |
| **உயர்நீதி மன்ற தலைமை நீதிபதி** | 90,000 | மற்ற உயர்நீதிமன்ற நீதிபதிகள் | 80,000 |
| **தலைமை தணிக்கை அதிகாரி** | 90,000 | | |

**மத்திய அமைச்சரவை**

- **சரத்து (74):** :இந்திய குடியரசுத் தலைவருக்கு உதவிபுரியவும், ஆலோசனை வழங்கவும் பிரதமரின் தலைமையிலான அமைச்சரவை ஒன்று இருக்கும். அமைச்சரவையின் ஆலோசனைகளை ஏற்றுக் கொண்டு குடியரசுத் தலைவர் செயல்பட்டாக வேண்டும் என்பது 42 மற்றும் 44வது அரசியலமைப்புத் திருத்தங்களுக்குப் பின்னர் திட்டவட்டமாகத் தெளிவு -படுத்தப்பட்டுள்ளது. அமைச்சரவை பாராளுமன்றத்திற்குக் குறிப்பாக மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பாகும். அமைச்சர்கள் குடியரசுத் தலைவருக்கு தனிப்பொறுப்பாவார்கள்.
- **சரத்து (74):** அமைச்சர்கள் மக்களவைக்கு கூட்டுப் பொறுப்பாவார்கள்.

**அமைச்சர்கள் வகை:**

**கேபினேட் அமைச்சர்கள்:** முக்கிய துறைகளான நிதி உள்நாட்டு விவகாரம் வெளிநாட்டு விவகாரம், இரயில் போக்குவரத்து போன்றவற்றை இவர்களின் பொறுப்பில் ஒதுக்கப் -பட்டுள்ளது. அமைச்சர்களிலேயே முக்கியமான தகுதி பெற்றவர்கள். அதிக அதிகாரமுள்ள குழுவாகும். அமைச்சரவை -யில் ஒரு உட்குழுவாக இது செயல்படுகிறது. கேபினெட் குழுக்களில் கலந்து கொண்டு முக்கிய முடிவுகளை எடுப்பார்கள்.

**இணை அமைச்சர்கள்:** இவர்கள் கேபினட் மற்றும் ராஜாங்க அமைச்சர்களுக்கு உதவியாக அமைச்சங்களில் செயல்படுகின்றனர்.

**ராஜாங்க அமைச்சர்கள்:** ராஜாங்க அமைச்சர்கள் பல்வேறு துறைகள் அல்லது இலக்காக்களுக்கு பொறுப்பாளராக திகழ்கின்றனர். இவர்கள் சிறப்பு அழைப்பில்லாமல் கேபினெட் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாது.